திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் இராணுவத்தினர் தங்களுக்கு இடம் வேண்டுமென்று கேட்டால் முதல் சலுகை அவர்களுக்குக் கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: முன்னாள் இராணுவத்தினருக்கு நிலம் கொடுப்பதற்குப் பிரத்தியேகமாகக் கவனிக்க வேண்டுமென்று விதி முறைகள் இருக்கின்றன. பிரையாரிடி அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது. இனியும் தொடர்ந்து அது மாதிரி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Land tax on Kuranthankode Panchayat Union

* 31 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the old rate of surcharge on land tax per acre of dry land in Kuranthankode Panchayat Union in Kalkulam taluk, Kanyakumari district;

(*b*) the old rate of water cess;

(*c*) whether there has been an increase in these, in recent times;

(*d*) if so, the reasons for such increase;

(*e*) whether representations have been received by the department for restoration of the old rates; and

(*f*) if so, the action taken on these representations?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) நிலவரியில் ஒரு ரூபாய்க்கு 40 காசு.

(இ) நன்செய்யாக மாற்றப்பட்ட புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 7 ஆயக்கட்டு நன்செய் நிலங்களுக்கு ரூ. 2.

(உ) 1—4—1966 முதல் (நிலவரியில்) மேல்வரி விகிதம் நில வரியில் ஒரு ரூபாய்க்கு 80 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது. தண்ணீர் வரி விகிதத்தில் மாற்றம் எதுவும் இல்லை.

(எ) ஊராட்சி ஒன்றியத்தின் வருவாயை அதிகரிப்பதற்காக மேல்வரி உயர்த்தப்பட்டுள்ளது.

(ஐ) இல்லை.

(ஒ) இவ்வினா எழவில்லை.

DR. H. V. HANDE: Is this increase in the rate of surcharge a part of the general programme of the Government, or has it been specifically done at the instance of this Panchayat Union? May I also know whether such increase has been made in the other parts of the State?

1969 பிப்ரவரி 24]

THE HON. THIRU K. A. MATHIALAGAN: It is not at the instance of the Government; to augment their resources, the panchayat union has done it.

திரு. டி. மார்டின்: தமிழகத்தில் குறைந்த நிலம், அதாவது 5 ஏக்கருக்கு உட்பட்டு நிலம், வைத்திருக்கிறவர்களுக்கு நில வரியையும் அதனுடைய தொடர்பான வரியையும் நீக்குவதற்கு அரசு இதுவரை எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நிலவரி சம்பந்தமாகப் புஞ்சை நிலத்திற்கு அடிப்படை நிலத்தீர்வை தமிழ்நாட்டிலே எடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு முதற்கொண்டே இரண்டு ஏக்கர் அளவான நிலங்களுக்கு ஒரு கோடி அறுபது லட்சம் ஏக்கருக்குக் கந்தாயம் என்று சொல்லக்கூடிய புஞ்சை நிலத் தீர்வை இல்லை. அந்த நிலங்களுக்கு மாத்திரம் அல்லாமல் புஞ்சை கணக்குப்படி புதிய நீர்ப்பாசன வசதிகள் பெறுகிற வைகை, அமராவதி, பவானி போன்ற பாசன வசதிகள் பெறுகிற நிலங்கள் இதிலே அடங்குகின்றன. ஆனால் நஞ்சை நிலத்தீர்வையை நீக்கு வதற்குச் சில சங்கடங்கள் இடைஞ்சலாக இருப்பதினாலே இது பற்றி ஆராய்ந்துகொண்டு வருகிறது. இதுபற்றி இந்த மன்றத் திலே வருவாய் வாரியத்தின் விரிவான அறிக்கை ஏற்கனவே வைக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அரசாங்கத்தினுடைய பொது வான கருத்து, வரியைக் குறைக்க வேண்டும் என்பதுதான். அப்படியிருக்கிற நேரத்திலே அதன்படி பஞ்சாயத்து யூனியன் தலைவர் இதிலே வரியை உயர்த்தியிருப்பது அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு நேர்மாறாக இருப்பதால் நடவடிக்கை எடுக்க ஏன் அரசாங்கம் முன்வரவில்லை? அந்தப் பஞ்சாயத்து செய்தது தவறு என்று வேறு உத்திரவு ஏன் போடக் கூடாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பொதுவாக வரிகள் குறையவேண்டும் என்பதுதான் கொள்கை. அரசாங்கம், அவர் களுக்கு இருக்கிற உரிமைகளில் தலையிட முடியாது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: நிதிப் பற்றுக்குறை இருக்கிற காரணத்தினாலேயும் அரசாங்கம் போதுமான மானியம் கொடுக்காத காரணத்தினாலேயும்தான் பஞ்சாயத்து யூனியன்கள் இந்த வரியை உயர்த்தியிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மானியம் கிடைக்க வில்லை என்ற காரணத்தினாலே மட்டும் அல்ல; இந்த அரசாங்கமே அருமாதிரிச் சில வரம்பு முறைகளுக்குக் கட்டுப்படுகிறது. இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை நாடவேண்டும். மாநில அரசாங்கத்தை அதன் கீழே இருக்கிற அமைப்புகள் நாட வேண்டும். இதுதான் ஏற்றுக்கொண்டிருக்கிற அரசியல் அமைப் பிலே இருக்கிற சூழ்நிலை.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள பஞ்சாயத்து யூனியன் நிலங்களுக்கு போடப்பட்டுள்ள மேல்வரியைப்பற்றி மட்டும் கேள்வி கேட்கவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்த நஞ்சை, புஞ்சை வரிகள் அந்தக் காலத்திலே ஏற்பட்டன. அன்றைக்கு நஞ்சையாக இருந்ததெல்லாம் இன்றைக்குப் புஞ்சையாக மாறிவிட்டது. புஞ்சையாக இருந்தது நஞ்சையாக மாறிவிட்டது. நஞ்சையை விடப் புஞ்சை அதிகமாக இருக்கக்கூடிய பிராந்தியத்திலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலத்திற்குப் போடப்பட்ட மேல்வரியைப்பற்றி மட்டும் கேட்கவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நான் பொதுவாகப் போட்டேன். கன்னியாகுமரி மட்டும் அல்ல, பொதுவாகவே கேட்கிறேன். நீண்ட காலத்திற்கு முன்னால் பிரித்து அடிப்படையிலே புஞ்சைக்கு மாத்திரம் விலக்கு அளித்துவிட்டு நஞ்சைக்கு இல்லாமல் இருந்தால் பாகுபாடு செய்யக்கூடிய தன்மையிலே இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இந்த அரசு அதனுடைய கொள்கையை இந்த மன்றத்திலே தெளிவாக விளக்கியிருக்கிறது. பொதுவாக, நிலவரியை எடுத்துவிட வேண்டும் என்பதுதான் கொள்கை. விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற அடிப்படையில், நஞ்சைக்கு அடிப்படை வரியை எடுத்துவிடவேண்டும் என்ற கொள்கை இருந்தாலும், இதிலே நீர் தீர்வை, அடிப்படைத் தீர்வை என்று இரண்டாக இருக்கிறது. அடிப்படை தீர்வையை எடுத்துவிட்டால் நீர் தீர்வை இருக்கிறது. நீர் தீர்வை 15 ரூபாய், அடிப்படைத் தீர்வை 8 ரூபாய் என்று இருந்தால், 8 ரூபாயை மட்டும் எடுத்துவிடுவதால் மேலும் பாரபட்சம் ஏற்படக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அதனால்தான் நஞ்சை நிலத்திற்கு இன்றைக்கு இல்லை. ஆனால் தமிழ்நாட்டிலே இருக்கிற இரண்டு ஏக்கர் அளவிற்குள்ள நிலங்களுக்கு, ஒரு கோடியே அறுபது லட்சம் ஏக்கருக்கு, அதாவது ஐந்தில் நான்கு பங்கு நிலத்திற்கு அடிப்படைத் தீர்வையை ஏற்கெனவே இந்த அரசாங்கம் ரத்து செய்திருக்கிறது.

விவசாயிகளுக்குக் கடன்

*32 வினு.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக விவசாயிகளுக்கு எந்தெந்தக் காரியங்களுக்காகக் கடன் வழங்கப்படுகிறது ?

(இ) அதற்காக 1966–67-ல் ஒதுக்கிய தொகை எவ்வளவு? 1967–68-ல் ஒதுக்கிய தொகை எவ்வளவு?